இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 01 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 25 – திங்கள்கிழமை 10 ஆகஸ்ட் 2026 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 01 : Thiruvalluvar Year - 2057 - Aadi 25 - Monday 10 August 2026 - Dak 10 Pages ₹ 5.00

# FCRA திருத்த மசோதாவை எதிர்க்கும் தி.மு.க.வுக்கு நன்றி!

## தலைவர் மு.க.ஸ்டாலினுடன் கிறித்துவ சமயப் பெரியோர்கள் சந்திப்பு!





**சென்னை, ஆக.10–**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, சென்னை - ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது வீட்டில், கழக மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி., தலைமையில் பல்வேறு கிறித்துவ சமயப் பெரியோர்கள் பலரும் சந்தித்து FCRA திருத்த மசோதாவை எதிர்த்து தி.மு.க. மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்குத் தங்களது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்தனர்.**

கழகத் தலைவர் அவர்களைச் சந்தித்தவர்களின் விவரம் வருமாறு:

1. ஆர்ச் பிஷப் சின்னப்பா,
2. இவாஞ்சலிஸ்ட் பால் தினகரன், ஜீசஸ் கால்ஸ்,
3. இவாஞ்சலிஸ்ட் பாஸ்டர் மோகன் செல்லராஜா, அசெம்பிளி ஆஃப் காட்,
4. பாதர் பிரான்சிஸ், டெபுடி ஜெனரல் செக்ரட்டரி, தமிழ்நாடு பிஷப் கவுன்சில்,
5. ரிவர்டு சாம் பிரிட்டோ பிரான்சிஸ், டைரக்டர் டிபார்ட்மெண்ட் ஆப் யூத் - தலித் போர்டு, சி.எஸ்.ஐ. சினோட்,
6. ரிவர்டு ஜெபசிங் சாமுவேல் டைரக்டர், சி.எஸ்.ஐ. சேவா & இ.எம்.எஸ்.ஹெட் யூனிட் இந்தியா,
7. ரிவர்டு ஜெப டேனியல் டைரக்டர், டிபார்ட்மெண்ட் ஆப் கம்யூனிகேஷன்ஸ், சி.எஸ்.ஐ. சினோட்,
8. ரிவர்டு மிஸ்டர் எபனேசர் – கம்யூனிகேசன் எக்சிக்யூட்டிவ், சி.எஸ்.ஐ. சினோட்,
9. ரிவர்டு திரு.பார்த்திபன் சி.எஸ்.ஐ. சினோட்,
10. பிஷப் ஆல்வின் பிரபு, அட்மின் ஆப், பெந்தகோஸ்டல் சர்ச், இரும்புலியூர்,
11. பிஷப் டேவிட், பெந்தகோஸ்டல் சர்ச், இரும்புலியூர்,
12. ரிவர்டு துரைசாமி, டிரஷரர், இவாஞ்சலிகல் சர்ச் ஆப் இந்தியா,
13. ரிவர்டு நோவா ஜேம்ஸ், நேஷனல் மிஷனரி சொசைட்டி ஆப் இந்தியா,
14. பிஷப் எஸ்தர் கதிரொலி, செக்ரட்டரி, தமிழ்நாடு கிறிஸ்டியன், கவுன்சில்,
15. பிரேம்நாத் சாமுவேல், சென்னை டிரான்பர்மேஷன் நெட்வொர்க் - லீடர் & கல்வாரி கம்யூனிட்டி மினிஸ்ட்ரிஸ், சீனியர் பாஸ்டர் பெந்தேகோஸ்தே,
16. ஜான் ஜோசப், விக்டரிஸ் மினிஸ்ட்ரீஸ் - பவுன்டர் & டைரக்டர்

மேற்கண்டோர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

### த.வெ.க. அரசை பின்னணியிலிருந்து இயக்குவது யார்? தொகுதி மறுவரையறை:

# காங்கிரசை காப்பாற்றவே எம்.பி.க்கள் கூட்டம்!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. காட்டமான பேட்டி!

**சென்னை, ஆக.10-**

**கழகத் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், “த.வெ.க. அரசை பின்னணியிலிருந்து இயக்குவது யார்” என்றும் “காங்கிரசை காப்பாற்றவே எம்.பி.க்கள் கூட்டம்” என்றும் காட்டமாக கூறியுள்ளார்.**



சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தொகுதி மறுவரையறை குறித்து அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தை கூட்டியிருக்கிறார். அந்தக் கூட்டத்தில் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள்கலந்துகொள்ளாதநிலையிலேயே அக்கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கூட்டம் நடத்துவதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பது தெளிவாக இல்லை. ஏனென்றால், இதேபோன்ற ஒரு கூட்டத்தை எங்களுடைய கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக இருந்தபோது, 5/3/2025 அன்று நடத்தியிருக்கிறார்கள்.

தொகுதி மறுவரையறை குறித்து அனைத்துக் கட்சிகளின் கருத்துகளையும் தெரிந்துகொள்வதற்காக, அவர் முதலமைச்சராக இருந்தபோது ஒரு கூட்டத்தை நடத்தினார். அந்தக் கூட்டத்தில் த.வெ.க. சார்பில், இன்று அமைச்சராக இருக்கக்கூடிய அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த் கலந்துகொண்டு, அங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டிருக்கிறார்.

அந்தத் தீர்மானங்களின் அடிப்படையிலே, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, அத்தனை கட்சிகளும், பா.ஜ.க.வைத் தவிர மற்ற கட்சிகள் அனைத்தும் ஏற்றுக்கொண்ட ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்திற்கும், இன்றைக்கு நடைபெற்றிருக்கக்கூடிய இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருக்கக்கூடிய முடிவுகளுக்கும் என்ன வித்தியாசம் என்பதை நாங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

**தமிழ்நாட்டின் உரிமைகளே முக்கியம் என்றார் எங்கள் தலைவர்!**

முதன்முதலில் இந்த தொகுதி மறுவரையறை குறித்த பேச்சு வந்தபோதே, எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், அப்போதைய முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், ஐந்து மாநில முதலமைச்சர்கள், மற்ற கட்சிகளின் தலைவர்களை எல்லாம் அழைத்து தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படக்கூடிய அத்தனை மாநிலங்களில் இருந்தும் அனைவரையும் அழைத்து சென்னையிலேயே ஒரு கூட்டத்தை நடத்தினார். அந்தக் கூட்டத்திலேயும் கலந்துகொண்ட முதலமைச்சர்கள், அந்தத் தீர்மானங்களை ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

அந்தக் கூட்டத்தில் ‘ஃபேர் டீலிமிடேஷன்’ என்பதுதான் முக்கியமாக வலியுறுத்தப்பட்டது. தொகுதி மறுவரையறையை நாங்கள் முற்றிலுமாக எதிர்க்கவில்லை. நியாயமான ஒரு தொகுதி மறுவரையறை நடைபெற வேண்டும் என்பதுதான் அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவாகவும், தீர்மானமாகவும் இருந்தது. அதில் கலந்துகொண்ட அத்தனை பேரும் ஒருமனதாக கையெழுத்திட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் தாண்டி, தேர்தல் நேரத்தில் தொகுதி மறுவரையறை கொண்டுவரப்பட்டபோது, தேர்தல் உச்சத்தில் இருந்த அந்த நேரத்தில்கூட, முதலமைச்சராக இருந்த மு.க. ஸ்டாலின் எங்களுக்கு தேர்தல் முக்கியம் இல்லை; தமிழ்நாட்டின் உரிமைகள் தான் முக்கியம். நாம் பாதிக்கப்படக் கூடாது என்ற ஒரு முடிவோடு அந்தப் பிரச்சாரத்தை கையில் எடுத்தார்.

**நாடாளுமன்றத்தில் மசோதாவை முறியடித்தோம்!**

அதுமட்டுமில்லாமல், தேர்தல் பணியில் இருக்கக்கூடிய அத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களையும், நீங்கள் போய் அந்தத் தீர்மானத்திற்கு எதிராகக் கொண்டுவரக்கூடிய மசோதாவிற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று எங்கள் அனைவரையும் அனுப்பி, முதல் முதலாக பா.ஜ.க. ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு அவர்கள் கொண்டுவந்த ஒரு மசோதா முறியடிக்கப்பட்டது என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற இயக்கங்கள் எதிர்த்த தொகுதி

## யார் எட்டப்பர் என்று மக்களுக்கு தெரியும்!

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்